வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

**Field Work Centre**

# தவணைப் பரீட்சை, நவம்பர்- 2016

# Term Examination, November - 2016

FWC

| தரம் :- 13 (2017) | பொருளியல் – I | இரண்டு மணித்தியாலங்கள் |
|---|---|---|

கவனிக்குக:- ✶ எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
✶ *01 - 50* வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் (1), (2), (3), (4), (5) என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து புள்ளடித்தாளில் (✕) இடுவதன் மூலம் காட்டுக.

01) பின்வருவனவற்றுள் நேர்ப் பொருளியல் கூற்றினைத் தெரிவு செய்க.
(1) உணவுப் பொருட்களை பங்கீட்டு அடிப்படையில் விநியோகம் செய்வது ஒரு நியாயமற்ற ஒதுக்கீட்டு முறையாகும்.
(2) சுதந்திரமான சந்தையில் பொருட்கள் சேவைகளின் விநியோகம் நியாயமான முறையில் இடம்பெறும்.
(3) சுதந்திர சந்தைப் பொருளாதாரங்களை விட கட்டளைப் பொருளாதாரங்கள் சிறப்பானவை.
(4) எதனை எந்தளவு உற்பத்தி செய்தல் என்ற பிரச்சினை அனைத்துச் சமூகங்களுக்கும் பொதுவானவை.
(5) சமமற்ற வளப்பகிர்வு நியாயமற்றதொன்றாகும்.

02) வீட்டுத்துறையினரும் நிறுவனத்துறையினரும் தனித்தனியே மேற்கொள்ளும் தீர்மானங்கள் பற்றி ஆய்வு செய்யும் பொருளியல்
(1) பேரினப் பொருளியல்
(2) சிற்றினப் பொருளியல்
(3) நேர்ப் பொருளியல்
(4) நியமப் பொருளியல்
(5) பருநிலைப் பொருளியல் ஆகும்.

03) பின்வரும் வளங்களில் மீளுருவாக்கம் செய்ய முடியாத வளமாக அமைவது எது?
(1) வன விலங்குகள் (2) காடுகள் (3) மீன்வளம்
(4) பெற்றோலியம் (5) புற்றரைகள்

04) இலவசப் பண்டம் என்பதால் கருதப்படுவது யாது?
(1) மனித முயற்சியால் பெறப்படும் பண்டமாகும்.
(2) நுகர்வின்போது அமையச் செலவினைக் கொண்டுள்ள பண்டமாகும்.
(3) நிரம்பலில் கட்டற்ற தன்மையையும் அமையச் செலவினைக் கொண்டிராததுமான பண்டமாகும்.
(4) விலை மதிப்புடைய பண்டமாகும்.
(5) நுகர்வில் போட்டித் தன்மையற்ற பண்டமாகும்.

05) அமையச் செலவு தோற்றம் பெற பிரதான காரணியாக அமைவது எது?
(1) வளங்கள் அருமையானவையாக இருத்தல்.
(2) மனித தேவைகள் அளவிட முடியாதவையாகக் காணப்படல்.
(3) தெரிவுப் பிரச்சினைகள் பல்வகைப்பட்டவையாக இருத்தல்.
(4) வளங்கள் மாற்றுப் பயன்பாட்டினைக் கொண்டிருத்தல்.
(5) தேவைகள் எண்ணற்றவையாகக் காணப்படல்.

06) ஒரு பொருளாதாரத்தின் "வளத்திரட்சி" என்பதனால் கருதப்படுவது யாது?

(1) இயற்கை வளங்களின் கிடைப்பனவைக் குறிக்கும்.

(2) வளங்களின் அருமைத் தன்மையைக் குறிக்கும்.

(3) உற்பத்திக் காரணிகளின் செழிப்புத்தன்மை இடத்துக்கிடம் வேறுபடுவதைக் குறிக்கும்.

(4) நிலம், உழைப்பு, மூலதனம் ஆகியவற்றின் ஒருங்கிணைந்த செயற்பாட்டைக் குறிக்கும்.

(5) நிலம், உழைப்பு, மூலதனம், முயற்சி ஆகிய உற்பத்திக்காரணிகளின் அளவையும் அவற்றின் வினைத்திறன் மட்டத்தையும் குறிக்கும்.

07) $X, Y$ என்னும் இரு பண்டங்களை உற்பத்தி செய்யும் ஒரு பொருளாதாரத்தில் அமையச் செலவு மாறாதிருக்கும் சந்தர்ப்பங்கள் எவை?

A - $X$ உம் $Y$ உம் நெருங்கிய பிரதியீடுகளாகும்.

B - உற்பத்தி வளங்கள் பூரணமாற்று உபயோகமுடையதாய் இருத்தல்.

C - உற்பத்தி செய்வதன் மூலம் வளங்கள் சிறப்புத் தேர்ச்சியடைதல்.


D - உற்பத்தி சாத்திய வளையி நேர்கோடாக அமைதல்.

E - உற்பத்திக்குக் கிடைக்கக்கூடிய தொழில்நுட்பங்களில் வேறுபாடு காணப்படல்.

(1) A யும் D யும் (2) A யும் F உம் (3) B யும் C யும்

(4) B யும் D யும் (5) C யும் E யும்

08) பின்வரும் உற்பத்திச் சாத்திய வளையியில் மூலதனப் பண்டங்களின் வெளியீடு 30 இல் இருந்து 40 ஆக அதிகரிக்குமாயின் அதற்கான அமையச் செலவின் பெறுமதி யாது?




(1) 8 அலகு நுகர்வுப் பண்டங்கள்

(2) 10 அலகு மூலதனப் பண்டங்கள்

(3) 58 அலகு நுகர்வுப் பண்டங்கள்

(4) 0.8 அலகு நுகர்வுப் பண்டங்கள்

(5) 60 அலகு மூலதனப் பண்டங்கள்

09) பொருளாதாரமொன்றில் அரசு தலையீடு செய்வதற்கான நியாயமான காரணமாக எதனைக் கருதுவீர்?

(1) அதிகளவிலான சமமற்ற வருமானப் பங்கீட்டை மேற்கொள்ளல்.

(2) தனியார்துறை நிறுவனங்கள் நுகர்வோரிடமிருந்து அறவிடும் மிகையான கட்டணங்களைத் தடுத்தல்.

(3) வள ஒதுக்கீட்டில் விலைப் பொறிமுறையின் பங்கை அதிகரித்தல்.

(4) மூலதனப் பொருட்களுக்கான வள ஒதுக்கீட்டை அதிகரித்தல்.

(5) பிறருக்கு தீங்கு விளைவிக்கும் உற்பத்திகளின் நுகர்வை ஊக்குவித்தல்.

10) கலப்புப் பொருளாதாரமொன்றில் "எதனை உற்பத்தி செய்தல்" என்ற வள ஒதுக்கீட்டுப் பிரச்சினையானது தீர்மானிக்கப்படுவது

(1) அரசாங்க அறிவுறுத்தல்களினால்

(2) நுகர்வோரின் நடத்தைகளால்

(3) முயற்சியாளனின் தனிப்பட்ட தீர்மானங்களினால்

(4) மத்திய திட்டமிடல் குழுவினால்

(5) சந்தை சக்திகளினாலும் அரசாங்கத்தினாலும்

11) சிறப்புத் தேர்ச்சியின் காரணமாக ஏற்படக்கூடிய மிகச் சாத்தியமான நிகழ்வு யாது?
(1) தொழிலாளி ஒருவருக்கான கூலி குறைவடையும்
(2) உற்பத்தி குறைவடையும்
(3) உற்பத்தித் திறன் அதிகரிக்கும்
(4) தொழில்நுட்ப அறிவு குறைவடையும்
(5) வளப்பயன்பாடு அதிகரிக்கும்.

12) சந்தையில் சாதாரண பண்டமொன்றின் கேள்வி வளையி இடது புறமாக நகர்வடைவதற்கான காரணமாக அமைவது
(1) கிட்டிய பதிலீடொன்றின் விலை வீழ்ச்சியாகும்.
(2) நிரப்புப் பண்டமொன்றின் விலை வீழ்ச்சியாகும்.
(3) நுகர்வோரின் வருமானம் அதிகரித்தல்.
(4) உற்பத்திச் செலவு அதிகரித்தல்.
(5) கருதப்படும் பொருளின் விலை வீழ்ச்சியடைதல்.

13) நிறுவனம் ஒன்றின் உற்பத்திக்கான விலைசார் நிரம்பல் நெகிழ்ச்சிக்குணகம் 0.5 ஆகும். ரூபா 40 விலையில் நிரம்பல் தொகை 800 அலகுகளாகும். விலை ரூபா 60 ஆக அதிகரிக்கும் போது அவ்விலையில் நிறுவனத்தின் மொத்த வருமானம் யாது?
(1) ரூபா 32000 (2) ரூபா 24000 (3) ரூபா 50000
(4) ரூபா 60000 (5) ரூபா 36000

14) அரசாங்கம் பொருட்கள் சேவைகள் மீதான வரியை விதிக்கும் போது வரிச்சுமையில் பெருமளவு தாக்கத்தினை நுகர்வோர் தாங்கும் சந்தர்ப்பங்கள் பின்வருவனவற்றுள் எது?

| | விலைசார் கேள்வி நெகிழ்ச்சி | விலைசார் நிரம்பல் நெகிழ்ச்சி |
|---|---|---|
| (1) | நெகிழ்ச்சியுடையது | நெகிழ்ச்சியற்றது |
| (2) | நெகிழ்ச்சியற்றது | நெகிழ்ச்சியற்றது |
| (3) | நெகிழ்ச்சியுடையது | நெகிழ்ச்சியுடையது |
| (4) | நெகிழ்ச்சியற்றது | நெகிழ்ச்சியுடையது |
| (5) | பூரண நெகிழ்ச்சியுள்ளது | பூரண நெகிழ்ச்சியற்றது |

15) குறித்த பொருளொன்றின் கேள்விச் சமன்பாடு பின்வருமாறு தரப்பட்டுள்ளது.
$$Qd = 100 - 10P$$
இப்பொருளின் விலை 50 ரூபாவாகும் போது விலைசார் கேள்வி நெகிழ்ச்சி யாது?
(1) ஒன்றைவிடக்கூடியது
(2) ஒன்றைவிடக்குறைவு
(3) ஒன்றுக்குச் சமமானது
(4) பூச்சியம்
(5) முடிவிலி


16) விவசாயப் பண்டங்களின் சந்தை விலைகள் வருடத்தின் சில காலப்பகுதிகளில் உயர்ந்த மட்டத்திலும் வேறு சில காலங்களில் குறைந்த மட்டங்களிலும் காணப்படும். இத்தகைய நிலைமைக்கு பிரதான காரணியாக அமைவது
(1) நெகிழ்வற்ற கேள்வியும் நெகிழ்வுள்ள நிரம்பலும் நிலவுகின்றமையாகும்.
(2) நெகிழ்வுள்ள கேள்வியும் நெகிழ்வுள்ள நிரம்பலும் நிலவுகின்றமையாகும்.
(3) நெகிழ்வற்ற கேள்வியும் நெகிழ்வற்ற நிரம்பலும் நிலவுகின்றமையாகும்.
(4) நெகிழ்வுள்ள கேள்வியும் நெகிழ்வற்ற நிரம்பலும் நிலவுகின்றமையாகும்.
(5) பூரண நெகிழ்வுள்ள கேள்வியும் பூரண நெகிழ்வற்ற நிரம்பலும் நிலவுகின்றமையாகும்.

17) தரப்பட்ட அட்டவணையின்படி $X$ உம் $Y$ உம்

| $X$ பண்டத்தின் விலை | $Y$ பண்டத்தின் கேள்வி |
|---|---|
| 15 | 50 |
| 20 | 100 |
| 25 | 150 |

(1) இணைப்புப் பண்டங்கள்
(2) பிரதியீட்டுப் பண்டங்கள்
(3) தொடர்பற்ற பண்டங்கள்
(4) ஆடம்பரப் பண்டங்கள்
(5) அத்தியாவசியப் பண்டங்கள்

18) குறித்த பொருளொன்றின் மீது அரசு உத்தரவாத விலைத்திட்டமொன்றை நடைமுறைப் படுத்துவதை பின்வரும் வரைபடம் காட்டுகின்றது. இவ்வரைபடத்தின்படி உற்பத்தியாளருக்கு நிரப்புக் கொடுப்பனவு ஒன்றை செய்யும் பொருட்டு அரசாங்கம் ஏற்கவேண்டிய செலவு யாது?





(1) ரூபா 2000 ஆகும்.
(2) ரூபா 3000 ஆகும்.
(3) ரூபா 4000 ஆகும்.
(4) ரூபா 6000 ஆகும்.
(5) ரூபா 9000 ஆகும்.

19) போட்டிச் சந்தையொன்றில் விற்பனை செய்யப்படும் $X$ என்ற பண்டத்தின் கேள்விச் சமன்பாடு $Qd = 80 - 4P$ ஆகவும் அதன் நிரம்பல் சமன்பாடு $Qs = -40 + 4P$ எனவும் தரப்பட்டால் $X$ பண்டத்தின் சமநிலை விலை யாது?


(1) ரூபா 10 (2) ரூபா 15 (3) ரூபா 20
(4) ரூபா 30 (5) ரூபா 40

20) கீழே தரப்பட்டுள்ள சந்தைச் சமநிலையைக் காட்டும் வரைபடத்தை அவதானித்து 15 ரூபா விலையில் நுகர்வோன் மிகையினையும் உற்பத்தியாளர் மிகையினையும் காண்க.




| | நுகர்வோன் மிகை | உற்பத்தியாளர் மிகை |
|---|---|---|
| (1) | 1500/= | 2250/= |
| (2) | 1750/= | 2750/= |
| (3) | 1000/= | 2250/= |
| (4) | 1500/= | 2550/= |
| (5) | 1250/= | 3000/= |

21) கீழே தரப்பட்டுள்ள வரைபடம் நுகர்வோர் பண்டத்திற்கான சந்தையைக் காட்டுகின்றது.




இப்பண்டத்தின் உற்பத்தியாளருக்கு அரசாங்கம் மாணியம் வழங்கும் தீர்மானமானது நன்மையளிப்பது

(1) உற்பத்தியாளருக்கு மட்டும்

(2) நுகர்வோருக்கு மட்டும்

(3) நுகர்வோருக்கும் உற்பத்தியாளருக்கும் சமன்

(4) உற்பத்தியாளருக்கு மேலாக நுகர்வோருக்கு

(5) நுகர்வோருக்கு மேலாக உற்பத்தியாளருக்கு

22) குறிப்பிட்ட பொருளொன்றின் வழங்கல் சமன்பாடு $Qs = -1000 + 100P$ எனத் தரப்பட்டுள்ளது. இப்பொருளின் மீது அரசாங்கம் 4 ரூபாவினை அலகுமானியமாக வழங்குமாயின் மானியத்தின் பின்னரான வழங்கல் சமன்பாடு யாது?

(1) $Qs = -500 + 100P$

(2) $Qs = -400 + 100P$

(3) $Qs = -200 + 100P$

(4) $Qs = -800 + 100P$

(5) $Qs = -600 + 100P$

23) $X$ பண்டத்தின் விலை 15% த்தினால் அதிகரித்த போது $Y$ பண்டத்தின் கேள்வி 20% தினால் அதிகரித்தது. $X$ பண்டத்திற்கும் $Y$ பண்டத்திற்கும் இடையிலான குறுக்குக் கேள்வி நெகிழ்ச்சிப் பெறுமதி யாது?

(1) 1.33 (2) 1.35 (3) 1.38 (4) 1.39 (5) 1.42

24) பதிலீட்டு விளைவு என்பது பின்வருவனவற்றின் ஒன்றின் காரணமாக கேள்வித் தொகையில் ஏற்படும் மாற்றமாகும். அக்காரணியானது

(1) சார்பு விலை மாறா நிலையில் பண வருமானத்தில் ஏற்படும் ஒரு மாற்றமாகும்.

(2) மெய் வருமானம் மாறா நிலையில் முழு விலைகளில் ஏற்படும் ஒரு மாற்றமாகும்.

(3) பண வருமானம் மாறா நிலையில் சார்பு விலையில் ஏற்படும் ஒரு மாற்றமாகும்.

(4) சார்பு விலைகள் மாறா நிலையில் மெய் வருமானத்தில் ஏற்படும் ஒரு மாற்றமாகும்.

(5) ஏனையவை மாறா நிலையில் சார்பு விலையில் ஏற்படும் ஒரு மாற்றமாகும்.

25) சந்தையில் பண்டமொன்றுக்கான கேள்வி மற்றும் நிரம்பல் சார்புகள் பின்வருமாறு

$QD = 100 - 5P$ $Qs = -20 + 5P$ தற்போது அரசாங்கம் 10 ரூபாவினை உயர்ந்தபட்ச விலையாக அமுல்படுத்துமாயின் அப்பண்டத்திற்கு ஏற்படக்கூடிய கறுப்புச்சந்தை விலை யாது?

(1) ரூபா 12 (2) ரூபா 11.50 (3) ரூபா 13

(4) ரூபா 14 (5) ரூபா 15

26) குறிப்பிட்ட நிறுவனமொன்று 30 அலகுகளை உற்பத்தி செய்யும் போது அதன் சராசரி செலவு ரூபா 40 ஆகும். சராசரி மாறும் செலவு ரூபா 10 ஆகும் எனின் நிறுவனத்தின் மொத்த நிலையான செலவு யாது?

(1) ரூபா 1000 (2) ரூபா 900 (3) ரூபா 1500

(4) ரூபா 1200 (5) ரூபா 400

27) நிறைபோட்டி நிறுவனம் ஒன்றின் பண்பாக அமைவது பின்வருவனவற்றுள் எது?

(1) நிறுவனங்கள் உட்பிரவேசிப்பதற்குத் தடை காணப்படும்.

(2) நிறுவனத்தின் கேள்வி வளையி சந்தைக்கேள்வி வளையியாகக் காணப்படும்.

(3) உற்பத்திப் பண்டங்கள் ஓரினத்தன்மையுடையனவாகக் காணப்படும்.

(4) நிறுவனம் விலையை நிர்ணயிப்பவனாகக் காணப்படும்.

(5) உற்பத்திப் பண்டங்களுக்கு பதிலீடுகள் காணப்படமாட்டா.

28) பின்வருவனவற்றுள் ஏற்றுக் கொள்ள முடியாத கூற்று எது?

(1) வெளியீடு பூச்சியமாகக் காணப்படும் போது நிறுவனமொன்றின் மொத்தச் செலவு அதன் மொத்த நிலையான செலவுக்குச் சமமாகக் காணப்படும்.

(2) நிறுவனமொன்றின் நிலையான செலவுக் கோட்டிற்கும் மொத்தச் செலவுக் கோட்டிற்கும் இடையிலான வித்தியாசம் மாறும் செலவாக அமையும்.

(3) வெளியீடு பூச்சியமாகக் காணப்படும் போது நிறுவனமொன்றின் மொத்தச் செலவு அதன் மாறும் செலவுக்குச் சமமாகக் காணப்படும்.

(4) நிறுவனமொன்றின் மொத்த நிலையான செலவு வெளியீடு பூச்சியமாகக் காணப்படும் போதும் வெளியீடு அதிகரித்துச் செல்லும் போதும் மாற்றமின்றிக் காணப்படும்.

(5) சராசரி நிலையான செலவுக்கோடு ஒருபோதும் கிடையச்சை தொட்டுச் செல்வதில்லை.

29) கீழுள்ள அட்டவணை நிறுவனமொன்றின் மொத்த மாறும் எல்லைச் செலவுகளைக் காட்டுகிறது.

| வெளியீடு அலகு | மொத்தச் செலவு (ரூ) | எல்லைச் செலவு (ரூ) |
|---|---|---|
| 1 | 100 | 25 |
| 2 | 120 | 20 |
| 3 | 135 | 15 |
| 4 | 150 | 15 |
| 5 | 170 | 20 |
| 6 | 190 | 20 |

5 அலகுகளை உற்பத்தி செய்வதற்கான சராசரி நிலையான செலவு யாது?

(1) ரூபா 25  (2) ரூபா 15  (3) ரூபா 20  (4) ரூபா 30  (5) ரூபா 10

30) பின்வருவனவற்றுள் நிறைபோட்டிச் சந்தையிலும் தனியுரிமைப் போட்டிச் சந்தையிலும் காணக்கூடிய பொதுவான பண்பு யாது?

(1) பிரவேச சுதந்திரம் காணப்படல்


(2) போட்டி விளம்பரங்கள் காணப்படும்

(3) விலை வேறுபடுத்தல் காணப்படும்

(4) சாதாரண இலாபம் உழைத்தல்

(5) நிறுவனத்தின் கேள்வி வளையியின் வடிவம் ஓரே மாதிரியானவை

31) பின்வரும் வரைபடத்தின் நுகர்வுச் சார்பினைக் காட்டுவது




(1) $C = -100 + 0.6y$

(2) $C = 100 + 0.6y$


(3) $C = 100 + 0.4y$

(4) $C = -100 + 0.4y$

(5) $C = 100 + 0.75y$

32) பின்வரும் வரைபடம் ஒரு பொருளாதாரத்தின் சேமிப்பு மாற்றத்தின் போது நுகர்வுத் தொழிற்பாடு $C_1$ விலிருந்து $C_2$ வாக நகர்வதைக் காட்டுகின்றது. இம்மாற்றம் பெருக்கி எல்லை நுகர்வு நாட்டம் என்பவற்றின் மீது எத்தகைய தாக்கத்தினை ஏற்படுத்தும்?

| | பெருக்கி $(k)$ | எல்லை நுகர்வு நாட்டம் $(mpc)$ |
|---|---|---|
| (1) | அதிகரிக்கும் | குறைவடையும் |
| (2) | அதிகரிக்கும் | அதிகரிக்கும் |
| (3) | குறைவடையும் | அதிகரிக்கும் |
| (4) | குறைவடையும் | குறைவடையும் |
| (5) | அதிகரிக்கும் | மாறாது |




33) குறிப்பிட்ட நிறுவனமொன்று தலா 5000/= பெறுமதியான 10 இயந்திரங்களைக் கொள்வனவு செய்கின்றது. இவற்றில் 6 இயந்திரங்கள் பழுதடைந்த இயந்திரங்களுக்காகக் கொள்வனவு செய்யப்பட்டது. 4 இயந்திரங்கள் உற்பத்தி விரிவாக்கத்திற்காக கொள்வனவு செய்யப்பட்டது எனின் தேறிய முதலீட்டுப் பெறுமதி யாது?

(1) ரூபா 20000 (2) ரூபா 30000 (3) ரூபா 50000
(4) ரூபா 15000 (5) ரூபா 25000

34)

| | மில்லியன் ரூபா |
|---|---|
| மொத்த உள்நாட்டு உற்பத்தி | 10000 |
| தேறிய தேசிய உற்பத்தி | 10500 |
| பெறுமானத் தேய்வு | 500 |
| ஏற்றுமதி | 2000 |
| இறக்குமதி | 1500 |

மேலே தரப்பட்ட காரணிகளின் அடிப்படையில் கிடைக்கப்பெற்ற தேறிய வெளிநாட்டுக் காரணி வருமானத்தின் பெறுமதி யாது?

(1) ரூபா 500 (2) ரூபா 1000 (3) ரூபா 1500
(4) ரூபா 2000 (5) ரூபா 2500

35) ஒரு நாட்டின் தேசிய வருமானத்திற்குள் உள்ளடங்கும் வருமானமாக பின்வருவனவற்றுள் எதனைக் கருதுவீர்?

(1) அரசின் வரி வருமானங்கள்
(2) வீட்டுத்துறைக்குக் கிடைக்கும் மாற்றல் வருமானங்கள்
(3) பாவித்த பொருட்களை மறு விற்பனை செய்வதனால் கிடைக்கும் வருமானங்கள்
(4) திறைசேரி முறிகள் மீது அரசாங்கம் கொடுக்கும் வட்டிக் கொடுப்பனவு
(5) கம்பனியல்லா வியாபார இலாபங்கள்

36) ஒரு பொருளாதாரத்தின் வருமானம் மொத்த உற்பத்தியின் மூலம் பெறப்படுவதால் மொத்த வருமானம் மொத்த உற்பத்திக்குச் சமமாக அமையும். இதனைக் குறிக்கும் பேரினப் பொருளாதார சமநிலை யாது?

(1) $y = C + I$
(2) $y = C + I + G$
(3) $y = C + I + G + m$
(4) $y = C + I + G + (x - m)$
(5) $y = C + I + G + x$

37) எளிமையான பொருளாதாரமொன்றின் மொத்த நுகர்வுச் சார்பு $C = 400 + 0.8y$ ஆகவும் முதலீடு $I = 200$ ஆகவும் உள்ளது எனின் இப்பொருளாதாரத்தின் சமநிலை வருமான மட்டம் யாது?

(1) 3000 ஆகும்
(2) 8000 ஆகும்
(3) 3200 ஆகும்
(4) 4000 ஆகும்
(5) 3800 ஆகும்

38) அரச துறையற்ற மூடப்பட்ட பொருளாதாரத்தின் முதலீட்டுப் பெருக்கியின் பெறுமதி 4 ஆகும். முதலீடு ரூபா 200 ஆல் அதிகரித்தால் நுகர்வானது எந்தளவால் அதிகரிக்கும்?

(1) 100 (2) 600 (3) 800 (4) 400 (5) 1200

39) வருமானத்தில் ஏற்படும் 10000 ரூபா அதிகரிப்பு நுகர்வை ரூபா 8000 இனால் அதிகரிக்குமாயின் எல்லை நுகர்வு நாட்டம் எல்லை சேமிப்பு நாட்டம் பெருக்கி என்பன தொடர்பாக சரியான தகவலைக் காட்டுவது

| | எல்லை நுகர்வு நாட்டம் mpc | எல்லை சேமிப்பு நாட்டம் mpc | பெருக்கி k |
|---|---|---|---|
| (1) | 0.2 | 0.8 | 4 |
| (2) | 0.8 | 0.2 | 5 |
| (3) | 0.75 | 0.25 | 4 |
| (4) | 0.25 | 0.75 | 4 |
| (5) | 0.6 | 0.4 | 5 |

40) பின்வருவனவற்றுள் பொதுப் பண்டங்கள் என்பதனுள் அடங்காதது எது?

(1) வெள்ளப் பாதுகாப்பு
(2) சுற்றுபுறச் சூழல் பாதுகாப்பு
(3) சட்டத்தையும் ஒழுங்கையும் பேணல்
(4) விதவைகள், அநாதைகளுக்கான கொடுப்பனவு
(5) கலக்கரை விளக்கம்

41) பின்வருவனவற்றுள் எது அதி திரவத்தன்மை கொண்டது?

(1) திறைசேரி முறிகள்
(2) கேள்வி வைப்புக்கள்
(3) சேமிப்பு வைப்புக்கள்
(4) காசோலைகள்
(5) அசையா ஆதனங்கள் (மெய்ச் சொத்துக்கள்)

42) ஒரு வங்கியின் ஐந்தொகையிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட பின்வரும் விடயங்களில் மிகவும் இலாபகரமான சொத்து எது?

(1) முற்பணங்கள்
(2) அழைப்புப் பணம்
(3) திறைசேரியுண்டியல்கள்
(4) வாடிக்கையாளரது வைப்புக்கள்
(5) மத்திய வங்கியிலுள்ள வங்கியின் நிலுவை

43) வர்த்தக வங்கியொன்று ரூபா 2000 மில்லியன் மொத்த வைப்புக்களையும் ரூபா 300 மில்லியன் மொத்த ஒதுக்குகளையும் கொண்டுள்ளதாகக் கருதுக. எஞ்சிய வங்கிச் சொத்துக்கள் கடன்களாக உள்ளன. ஒதுக்கு வீத தேவை 10% ஆக இருப்பின் வங்கியிடம் தற்போது இருக்கும் மிகை ஒதுக்கின் அளவு யாது?

(1) ரூபா 300 மில்லியன்
(2) ரூபா 250 மில்லியன்
(3) ரூபா 150 மில்லியன்
(4) ரூபா 100 மில்லியன்
(5) ரூபா 200 மில்லியன்

44) பணத்திற்கான கேள்வி என்பதனைக் குறிக்கும் சரியான கூற்றினைத் தெரிவு செய்க.

(1) மத்திய வங்கியின் பண வெளியீட்டினைக் குறிக்கும்.
(2) குறிப்பிட்ட ஒரு விலையில் பணத்திற்கான நிரம்பல் அளவைக் குறிக்கும்.
(3) சுற்றோட்டத்தில் ஈடுபடுத்தப்படும் பணத்தின் அளவைக் குறிக்கும்
(4) மக்கள் தமது கரங்களில் பணமாக வைத்திருக்க விரும்பும் அளவைக் குறிக்கும்.
(5) பணத்தைப் பணமாக வைத்திருப்பதனால் கிடைக்கும் நன்மையைக் குறிக்கும்.

45) பின்வரும் கூற்றில் தவறான கூற்றை இனம் காண்க.

(1) எதிர்கால வட்டி வீதத்திற்கும் பணத்தின் ஊகநோக்கக் கேள்விக்குமிடையில் நேரான தொடர்பு காணப்படும்.
(2) எதிர்கால வட்டி வீதத்திற்கும் முறிகளின் விலைக்குமிடையில் எதிரான தொடர்பு காணப்படும்.
(3) வட்டி வீதத்திற்கும் ஊகநோக்கப் பணக்கேள்விக்குமிடையில் எதிரான தொடர்பு காணப்படும்.
(4) வட்டி வீதத்திற்கும் பணநிரம்பலுக்குமிடையில் எதிரான தொடர்பு காணப்படும்.
(5) எதிர்கால வட்டி வீதத்திற்கும் பணத்தின் ஊக நோக்கக் கேள்விக்குமிடையில் எதிரான தொடர்பு காணப்படும்.

46) வணிக வங்கிகள் தமது மிகை ஒதுக்கினை குறைக்கும் போது யாது நிகழும்?

(1) பண அடித்தளம் வீழச்சியடையும்.
(2) பண அடித்தளம் உயர்வடையும்.
(3) பண நிரம்பல் உயர்வடையும்.
(4) பணநிரம்பல் வீழ்ச்சியடையும்.
(5) வைப்பாகப் பெருக்கி வீழ்ச்சியடையும்.

47) பின்வரும் பணத்தின் தொழிற்பாடுகளில் எத்தொழிற்பாடு "சிறப்புத் தேர்ச்சி" ஏற்படக் காரணமாகின்றது?

(1) பணம் கணக்கியல் அலகாகச் செயற்படல்.
(2) பிற்போடப்பட்ட கொடுப்பனவுகளின் நியமமாகத் தொழிற்படல்.
(3) எல்லோராலும் ஏற்றுக்கொள்ளும் தன்மையைக் கொண்டிருத்தல்.
(4) கொடுப்பனவுச் செலவாணி ஊடகமாகச் செயலாற்றுதல்.
(5) 100% திரவத் தன்மையைக் கொண்டிருத்தல்.

48) பணத்தைக் கைகளில் பணமாக வைத்திருப்பது தொடர்பான சந்தர்ப்பச் செலவு யாது?

(1) கைவிடப்பட்ட நுகர்வு
(2) கடன் கொடுக்கல் வாங்கல் செலவுகள்
(3) களவு மற்றும் ஆபத்து மட்டம்
(4) பணத்தின் பெறுமதி குறைவடைதல்
(5) வருமானம் உழைக்கக்கூடிய சொத்துக்களில் இருந்து கிடைக்கும் வருமானம்

49) பணவீக்கத்தின் பொருளாதார விளைவு யாது?

(1) மெய்வட்டி வீதத்தை உயர்த்துகின்றது.

(2) சேமிப்பினை ஊக்குவிக்கின்றது.

(3) வாழ்க்கைச் செலவுகளை உயர்த்தி மெய்க்கூலியை வீழ்ச்சியடையச் செய்கின்றது.

(4) வறுமையைத் தனிக்கின்றது.

(5) இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துகின்றது.

50) ஒரு தூய பொதுப் பண்டமானது கட்டாயமாகவே

(1) உற்பத்தியில் அமையச் செலவு இல்லாத பண்டமாக இருக்கும்.

(2) ஒருவரது நுகர்வு மற்றையோரது நுகர்வை எவ்வகையிலும் தடுப்பதாக இல்லாத பண்டமாக இருக்கும்.

(3) சந்தை விலையிலும் குறைந்த விலையில் பொதுத்துறை தனியார்துறை இரண்டினாலுமே வழங்கப்படுவதாயிருக்கும்.

(4) சந்தை விலையிலும் குறைந்த விலையில் தனியார் துறையினால் மட்டும் வழங்கப் படுவதாயிருக்கும்.

(5) அமையச் செலவிலும் குறைந்த விலையில் பொதுத்துறையினால் மட்டும் வழங்கப் படுவதாயிருக்கும்.

The National e-learning Portal for The General Education

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
**Field Work Centre**
# தவணைப் பரீட்சை, நவம்பர்- 2016
# Term Examination, November - 2016

FWC

| தரம் :- 13 (2017) | பொருளியல் – II | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

அறிவுறுத்தல்கள் :-

❖ உப பிரிவு ‘அ’ உப பிரிவு ‘ஆ’ ஆகியவற்றிலிருந்து குறைந்தபட்சம் இரண்டு வினாக்களையேனும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

## உப பிரிவு ‘அ’

**(இப்பிரிவிலிருந்து குறைந்தது இரு வினாக்களைத் தெரிவு செய்க)**

01) (i) அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகள் யாவும் தெரிவுப் பிரிச்சினைகளாகும். இக்கூற்றினை விளக்குக. (4 புள்ளிகள்)

(ii) ஒரு சந்தைப் பொருளாதாரத்தில் விலைகளின் தொழிற்பாடுகள் யாவை? (3 புள்ளிகள்)

(iii) என்ன பொருளை எந்தளவு உற்பத்தி செய்தல் என்ற பிரச்சினைக்கு ஒவ்வொரு பொருளாதார முறைகளும் தீர்வு காணும் வகையினை விளக்குக. (5 புள்ளிகள்)

(iv) சந்தைப் பொருளாதாரத்திற்கும் மத்திய திட்டமிடல் பொருளாதாரத்திற்கும் இடையில் நீர் காணும் வேறுபாடுகள் எவை? (4 புள்ளிகள்)

(v) ‘அருமை’, ‘தெரிவு’, ‘அமையச் செலவு’ என்பவற்றிற்கிடையிலான தொடர்பினை விளக்குக. (4 புள்ளிகள்)

02) (i) உற்பத்தி இயல்தகவு வளையி ஒன்றை வரைவதற்கான எடுகோள்கள் எவை? (3 புள்ளிகள்)

(ii) ஓர் உற்பத்திச் சாத்திய வளையியின் பொதுவான வடிவம் என்ன? ஏன் அப்படி உள்ளது என விளக்குக. (4 புள்ளிகள்)

(iii) உற்பத்திச் செயற்றிறன் மற்றும் ஒதுக்கீட்டுச் செயற்றிறன் என்பவற்றுக்குத் தேவையான நிபந்தனைகள் எவை? (5 புள்ளிகள்)

(iv) உற்பத்தி இயல்தகவு எல்லையின் வலப்புற நகர்வை ஏற்படுத்தும் காரணிகள் எவை? (2 புள்ளிகள்)

(v) சர்வதேச வர்த்தகத்தின் மூலம் ஒரு பொருளாதாரம் தனது நுகர்வினை அதிகரிக்க முடியும் என்பதை உற்பத்தி இயலளவு வளையியைப் பயன்படுத்தி விளக்குக. (3 புள்ளிகள்)

(vi) வினைத்திறன் அதிகரிப்பு, விளைதிறன் அதிகரிப்பு என்பவற்றை உற்பத்தி சாத்திய வளையி மூலம் வேறுபடுத்திக் காட்டுக. (3 புள்ளிகள்)

03) (i) வேறுபட்ட பண்டங்கள் வேறுபட்ட கேள்வியின் விலை நெகிழ்ச்சியைக் கொண்டிருப் பதற்கான காரணங்கள் எவை? (4 புள்ளிகள்)

(ii) சாதாரண பொருள், இழிவுப் பொருள், கிபன் பொருள் என்பவற்றை வேறுபடுத்துக. (4 புள்ளிகள்)

(iii) குறித்த பொருளொன்றின் கேள்வி மற்றும் நிரம்பல் சமன்பாடுகள் பின்வருமாறு தரப்பட்டுள்ளன.

$Qd = 600 - 10P$ கேள்விச் சமன்பாடு

$Qs = -400 + 10P$ நிரம்பல் சமன்பாடு

அ) சந்தைச் சமநிலை விலை மற்றும் சமநிலைத் தொகை என்பவற்றைக் காண்க. (2 புள்ளிகள்)

ஆ) அரசாங்கம் இப்பண்டங்களின் மீது அலகு வரியாக 4/= வினை விதிக்குமாயின் புதிய சமநிலை விலை சமநிலைத் தொகை யாவை? (2 புள்ளிகள்)

இ) வரியின் காரணமாக நுகர்வோன் மிகையில் ஏற்பட்ட மாற்றம் யாது? (2 புள்ளிகள்)

ஈ) வரியின் காரணமாக உற்பத்தியாளர் மிகையில் ஏற்பட்ட மாற்றம் யாது? (2 புள்ளிகள்)

உ) அரசுக்குக் கிடைத்த வரி வருமானம் யாது? (3 புள்ளிகள்)

ஊ) வரியின் காரணமாக சமூகத்திற்கு ஏற்பட்ட நலன் இழப்பு யாது? (2 புள்ளிகள்)

04) (i) குறைந்து செல்லும் எல்லை விளைவு விதி, அளவுத்திட்ட விளைவு விதி என்பவற்றை வேறுபடுத்துக. (4 புள்ளிகள்)

(ii) உற்பத்திக் கோட்பாடு தொடர்பாக குறுங்காலம் நீண்டகாலம் இரண்டையும் வேறுபடுத்தி ஆராய்க. (4 புள்ளிகள்)

(iii) நிறைபோட்டிச் சந்தையிலுள்ள ஒரு நிறுவனத்தின் கேள்விக் கோட்டிற்கும் தனியுரிமைச் சந்தையிலுள்ள ஒரு நிறுவனத்தின் கேள்விக் கோட்டிற்கும் இடையிலான வேறுபாடுகள் எவை? இதற்கான காரணங்கள் யாவை? (4 புள்ளிகள்)

(iv) நிறுவனம் ஒன்றின் சமநிலை என்பதனாற் கருதப்படுவது யாது? இதற்கான இரண்டு நிபந்தனைகளும் எவை? (2 புள்ளிகள்)

(v) பொருளியல் வாடகை என்றால் என்ன? எத்தகைய சந்தர்ப்பத்தில் ஒரு உற்பத்திக் காரணி பெறும் வருமானம் முழுவதும் பொருளியல் வாடகையாக அமையும் என்பதை விளக்குக. (5 புள்ளிகள்)

05) (i) மொத்த உள்நாட்டு உற்பத்திக் கணிப்பீட்டில் ‘‘இரட்டை எண்ணல்’’ என்ற பிரச்சினை எவ்வாறு எழுகின்றது? அது எவ்வாறு நீக்கப்படுகின்றது? உதாரணம் தந்து விளக்குக. (5 புள்ளிகள்)

(ii) தேசிய வருமானக் கணிப்பீட்டினை மேற்கொள்வதால் கிடைக்கும் நன்மைகள் எவை? (4 புள்ளிகள்)

(iii) திறந்த பொருளாதாரம் ஒன்றின் மொத்த செலவீட்டின் கூறுகள் எவை? (3 புள்ளிகள்)

(iv) மூடிய பொருளாதாரம் ஒன்றின் பின்வரும் தகவல்கள் உமக்குத் தரப்படுகின்றன.

$C = 200 + 0.75y$
$T = 0.2y$
$G = 300\ mR$
$R = 200\ mR$
$I = 550\ mR$

பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.

அ) சமநிலைத் தேசிய வருமான மட்டம் (2 புள்ளிகள்)

ஆ) பாதீட்டு நிலுவை (2 புள்ளிகள்)

இ) வருமானப் பெருக்கி (2 புள்ளிகள்)

ஈ) முதலீடு 400 மில்லியன் ரூபாவினால் அதிகரிக்குமாயின் புதிய சமநிலைத் தேசிய வருமான மட்டம் யாது? (2 புள்ளிகள்)

**உப பிரிவு ‘ஆ’**

**(இப்பிரிவிலிருந்து குறைந்தது இரு வினாக்களைத் தெரிவு செய்க)**

06) (i) பணத்தின் பிரதான பணிகள் எவை? (4 புள்ளிகள்)

(ii) மக்கள் தமது கைகளில் பணத்தை பணமாக வைத்திருப்பதற்கான காரணங்கள் எவை? (3 புள்ளிகள்)

(iii) கேள்வித்தூண்டல் பணவீக்கம் என்றால் என்ன? (4 புள்ளிகள்)

(iv) வட்டி வீதத்திற்கும் ஊகநோக்கப் பணத்திற்கான கேள்விக்குமிடையிலான தொடர்பை வரைபடம் மூலம் காட்டுக. (5 புள்ளிகள்)

(v) மிக விரிந்த பணநிரம்பலில் ($M_4$ இல்) உள்ளடங்கும் நவீன பணக்கூறுகள் எவை? (2 புள்ளிகள்)

(vi) திரட்டப்பட்ட விரிந்த பணநிரம்பலில் ($M_2b$) உள்ளடங்கும் விடயங்கள் எவை? (2 புள்ளிகள்)

07) (i) கற்பிதமான பொருளாதாரம் ஒன்றின் பணவியல் தொடர்பான சில தரவுகள் கீழே தரப்பட்டுள்ளன.

| | ரூபா மில்லியன் |
|---|---|
| பொதுமக்களிடமுள்ள நாணங்கள் | 150 |
| வர்த்தக வங்கியிலுள்ள நாணயங்கள் | 30 |
| மத்திய வங்கியிலுள்ள வர்த்தக வங்கி வைப்புக்கள் | 90 |
| வர்த்தக வங்கியிலுள்ள பொதுமக்களது கேள்வி வைப்புக்கள் | 120 |
| வர்த்தக வங்கியிலுள்ள பொதுமக்களது தவணை சேமிப்பு வைப்பக்கள் | 800 |
| வெளிநாட்டு நாணய வைப்புக்கள் | 250 |

பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.

அ) சுற்றோட்டத்திலுள்ள நாணயங்கள்

ஆ) குறுகிய பணநிரம்பல் ($m_1$)

இ) விரிந்த பணநிரம்பல் ($m_2$)

ஈ) ஒன்று திரட்டப்பட்ட விரிந்த பணநிரம்பல் ($m_2b$) (8 புள்ளிகள்)

(ii) பணத்தின் பெறுமானத் திரட்டுத் தொழிற்பாட்டின் அமையச் செலவு யாது? (4 புள்ளிகள்)

(iii) இலங்கையிலுள்ள வணிக வங்கிகளின் பிரதான தொழிற்பாடுகள் எவை? (4 புள்ளிகள்)

(iv) வணிக வங்கிகள் ‘இலாபச் சொத்துக்கள்’’ ‘‘திரவச் சொத்துக்கள்’’ என்ற இருவகையான சொத்துக்களையும் பேணுவதற்கான காரணங்கள் எவை? (4 புள்ளிகள்)

08) (i) வணிக வங்கிகளின் ‘‘பணவாக்கம்’’ என்பதனாற் கருதப்படுவது யாது? (4 புள்ளிகள்)

(ii) பண ஆக்கத்தை தீர்மானிப்பதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் எவை? (4 புள்ளிகள்)

(iii) இலங்கை வணிக வங்கிகள் நிதிகளைத் திரட்டும் மூன்று பிரதான மூலாதாரங்களைத் தருக. (3 புள்ளிகள்)

(iv) வங்கித்துறைக் கட்டமைப்பிலுள்ள வணிக வங்கியொன்றின் எளிமைப்படுத்தப்பட்ட வடிவம் பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

| பொறுப்புக்கள் (மில்லியன் ரூபா) | தொகை | சொத்துக்கள் (மில்லியன் ரூபா) | தொகை |
|---|---|---|---|
| வைப்பு | 100000 | ஒதுக்கு | 22000 |
| | | பிணைகள் | 38000 |
| | | கடன்கள் | 40000 |
| மொத்தம் | 100000 | | 100000 |

அ) ஒதுக்கு வீதம் 20% ஆயின் இவ்வங்கி வழங்கக்கூடிய புதிய கடன்களின் உச்ச அளவு யாது?

ஆ) இம்மேலதிக அளவினைக் கடன் வழங்கிய பின்னர் வங்கியின் புதிய ஐந்தொகை எவ்வாறு இருக்கும் என்பதைக் காட்டுக.

இ) இவ்வங்கி புதிய கடன்களின் பொருட்டு வழங்கிய காசோலைகள் யாவும் வங்கிக்கெதிராகத் தீர்ப்பனவு செய்யப்பட்ட பின்னர் அதன் ஐந்தொகை எவ்வாறு அமையும்? (9 புள்ளிகள்)

09) (i) தனியார் செலவு சமூகச் செலவு என்பவற்றை வேறுபடுத்துக. (4 புள்ளிகள்)

(ii) சந்தைப் பொருளாதாரங்கள் தோல்வி அடைவதற்கான காரணங்கள் எவை? (4 புள்ளிகள்)

(iii) வெளிவாரி விளைவுகளினால் சந்தைத் தோல்வி ஏற்படுவதைத் தவிர்க்கக்கூடிய வகையில் அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை? (4 புள்ளிகள்)

(iv) பின்வருவனவற்றை வேறுபடுத்துக.

அ) தூய தனியார் பொருள் தூய பொதுப் பொருள்

ஆ) தீங்கிழைக்கும் பொருள் தீய பொருள் (4 புள்ளிகள்)

(v) பின்வரும் வெளிவாரிகளுக்கு ஒவ்வொரு உதாரணம் தருக.

அ) உற்பத்தியில் நேர்க்கணிய வெளிவாரிகள்

ஆ) உற்பத்தியில் எதிர்க்கணிய வெளிவாரிகள்

இ) நுகர்வில் நேர்க்கணிய வெளிவாரிகள்

ஈ) நுகர்வில் எதிர்க்கணிய வெளிவாரிகள் (4 புள்ளிகள்)

10) (i) மேன்மைப் பண்டங்கள் என்பவை யாவை? இவற்றை ஏன் அரசாங்கம் வழங்க வேண்டியுள்ளது? (4 புள்ளிகள்)

(ii) சந்தைப் பொருளாதாரம் ஒன்றில் 'வருமானம்' 'செல்வம்' என்பவற்றில் காணப்படும் சமமின்மையைக் குறைக்கும் வகையில் அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் எவை? (4 புள்ளிகள்)

(iii) இலங்கை அரசாங்கத்தின் பாதீட்டில் இடம்பெறும் மீண்டெழும் செலவினங்கள் எவை? (3 புள்ளிகள்)

(iv) வரிவிதிப்பின் நீதித்தன்மை என்றால் என்ன? வரிவிதிப்பின் நீதித் தன்மையை எவ்வாறு புகுத்த முடியும்? (4 புள்ளிகள்)

(v) வரிவிதிப்பின் நோக்கங்கள் எவை? (5 புள்ளிகள்)